கைத்தறி, ஜவுளித்துறை முதன்மை செயலாளராக கே.பணீந்திர ரெட்டி நியமனம்

சென்னை, ஏப். 13–

கைத்தறி, ஜவுளித்துறை முதன்மை செயலாளராக கே.பணீந்திர ரெட்டி நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்து தமிழக தலைமைச் செயலாளர் கிரிஜா வைத்தியநாதன் வெளியிட்டுள்ள அரசாணையில் கூறியிருப்பதாவது:

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மை செயலாளர் கே.பணீந்திர ரெட்டி இடமாற்றம் செய்யப்பட்டு, கைவினை, கைத்தறி, ஜவுளி மற்றும் காதித்துறை முதன்மை செயலாளராக நியமிக்கப்பட்டார்.

கைவினை, கைத்தறி, ஜவுளி மற்றும் காதித்துறை முதன்மை செயலாளர் ஹர்மந்தர் சிங், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் முதன்மை செயலாளராக இடமாற்றம் செய்யப்பட்டார்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ஹன்ஸ்ராஜ் வர்மா, சிறப்பு திட்டங்கள் அமலாக்கத்துறையின் முழு கூடுதல் பொறுப்பு வகிப்பார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

சென்னையில் சீருடைப்பணியாளர் தேர்வாணைய போட்டித் தேர்வு: இலவச பயிற்சி

சென்னை, ஏப். 13

சென்னையில் சீருடைப் பணியாளர் தேர்வாணைய போட்டித் தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன என கலெக்டர் அன்புச்செல்வன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் (பொது), சென்னை சாந்தோமில் இயங்கி வரும் தன்னார்வப் பயிலும் வட்டத்தின் மூலம் மாணவ, மாணவியர்களின் நலன் கருதி எதிர்வரும் தமிழ்நாடு சீருடைப்பணியாளர் தேர்வாணையம் நடத்தும் காவலர் பணிக்கான போட்டித்தேர்வுக்கு சென்னை மாவட்ட மனுதாரர்கள் திங்கள் முதல் வெள்ளி வரை தினமும் காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும் இலவச பயிற்சியில் கலந்துகொள்ள அவர்களது வேலைவாய்ப்பு பதிவு அடையாள அட்டை மற்றும் உரிய கல்வி சான்றுகளுடன் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம்(பொது) சாந்தோம், சென்னை அலுவலகத்தை திங்கள் முதல் வெள்ளி வரை அலுவலக நேரங்களில் தொடர்பு கொள்ளுமாறு சென்னை மாவட்ட கலெக்டர் அன்புச்செல்வன் தெரிவித்துள்ளார்.

பிருந்தாவன் நகர் மின்மயானத்திற்கு பதில் போரூர் ஆற்காடு சாலை மயானபூமி

சென்னை, ஏப். 13–

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை, பிருந்தாவன் நகரில் உள்ள மின்மயானத்தில் எந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதால், இம்மாதம் 16–ந் தேதி முதல் அடுத்த மாதம் 15ந் தேதி வரை தற்காலிகமாக மூடப்பட உள்ளது. மேலும், பராமரிப்பு பணி நடைபெறும் நாட்களில் அருகில் உள்ள போரூர் ஆற்காடு சாலையில் உள்ள மின் மயானபூமியை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

எல்லா நன்மைகளையும் நல்கிடும் ஆண்டாக மலர வேண்டும்

எடப்பாடி ‘விஷு’ புத்தாண்டு வாழ்த்து

சென்னை, ஏப். 13–

மலையாள மொழி பேசும் மக்களுக்கு முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி ‘விஷு’ வாழ்த்து தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் வெளியிட்டுள்ள விஷு புத்தாண்டு வாழ்த்து செய்தியில் கூறியிருப்பதாவது:–

மலையாள புத்தாண்டு தினமான ‘‘விஷு’’ திருநாளை மகிழ்ச்சியோடு கொண்டாடும் மலையாள மொழி பேசும் மக்கள் அனைவருக்கும் எனது இனிய புத்தாண்டு நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கேரளத்தின் மிக முக்கிய பண்டிகைகளில் ஒன்றான ‘‘விஷு’’ திருநாளன்று மலையாள மக்கள், அதிகாலையில் கண் விழித்தவுடன் முதலில் விஷுக் கனியை கண்டு, மலரும் இப்புத்தாண்டு தம் வாழ்வில் எல்லா நன்மைகளையும் நல்கிடும் ஆண்டாக மலர வேண்டும் என்று கடவுளை வழிபட்டு, ‘‘விஷு கைநீட்டம்’’ வாயிலாக வீட்டிலுள்ள பெரியோரிடம் ஆசியும், அன்புப்பரிசாக பணமும் பெற்று, குடும்பத்தினருடன் விருந்துண்டு விஷு பண்டிகையை உற்சாகமாக கொண்டாடி மகிழ்வார்கள்.

இந்தப் புத்தாண்டு, மலையாள மக்கள் வாழ்வில் எல்லா நலங்களையும், வளங்களையும் வழங்கிடும் ஆண்டாக மலரட்டும் என்று வாழ்த்தி, மீண்டும் ஒரு முறை எனது ‘‘விஷு’’ திருநாள் நல்வாழ்த்துகளை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு எடப்பாடி கே. பழனிசாமி கூறியுள்ளார்.

எல்லோருக்கும் அனைத்து வளங்களும் நலன்களும் கிடைக்கட்டும்

தினகரன் தமிழ்ப்புத்தாண்டு வாழ்த்து

‘ஜெயலலிதாவின் ஆசி என்றென்றும் நமக்கு உண்டு என புதிய ஆண்டில் அடி எடுத்து வைப்போம்’

சென்னை, ஏப்.13–

தமிழ் புத்தாண்டையொட்டி அனைவருக்கும் அண்ணா தி.மு.க. (அம்மா) துணைப்பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியிருப்பதாவது:–

‘உலகெங்கும் வாழும் தமிழ் மக்களுக்கு என் இதயம்கனிந்த தமிழ்ப்புத்தாண்டு நல்வாழ்த்துகளை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பல ஆயிரம் ஆண்டுகளாக சித்திரை மாதத்தின் முதல் நாளை தமிழர்களும், இந்திய துணைக் கண்டத்தில் வாழும் பெருவாரியான மக்களும் புது வருடத்தின் தொடக்க நாளாகக் கொண்டாடி வருகின்றனர்.

இந்தப் புதிய ஆண்டில் நம் பண்பாட்டின் பழமைச் சிறப்புகளையும், நம் கலாச்சாரத்திற்கே உரிய குடும்ப உணர்வுகளையும், உறவுகளையும் மதித்துப் போற்றுவோம். சித்திரை முதல் நாளை தமிழ்ப் புத்தாண்டாக நிலைநாட்டியவர் நம் புரட்சித்தலைவி அம்மா.

கடந்த ஆண்டுகளில் அம்மா இத்திருநாளில் இறைவழிபாடு செய்து எல்லோருக்கும் எல்லா நன்மையும் விளைய வேண்டுமென்று பிரார்த்தித்து வாழ்த்து தெரிவித்தார். ஜெயலலிதாவின் ஆசியும், வாழ்த்தும் நமக்கு என்றென்னும் உண்டு என்கிற உணர்வோடு இந்தப் புதிய ஆண்டில் அடியெடுத்து வைப்போம்.

எல்லோருக்கும் இறைவன் அனைத்து வளங்களையும், நலன்களையும் இப்புதிய ‘ஹேவிளம்பி’ வருடத்தில் வழங்கிட எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து, மீண்டும் ஒருமுறை எனது அன்பான தமிழ்ப்புத்தாண்டு நல்வாழ்த்துகள் அனைவரும் உரித்தாகட்டும்’.

இவ்வாறு டிடிவி. தினகரன் கூறியுள்ளார்.

தமிழக முன்னாள் பஞ்சாயத்து தலைவர்கள் பிரதமர் மோடியுடன் சந்திப்பு

சென்னை, ஏப்.13

தமிழ்நாடு முன்னாள் கிராம பஞ்சாயத்து தலைவர்கள், மத்திய அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன் ஏற்பாட்டின் பேரில் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்தனர்.

மத்திய சாலை போக்குவரத்து, நெடுஞ்சாலைத்துறை மற்றும் கப்பல்துறை அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணன் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: சுகாதாரமான குடிநீர், 100 சதவீதம் கழிவறை, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தை 100 சதவீதம் அமல்படுத்துதல், சிறந்த கிராம பஞ்சாயத்து பெண் தலைவர், 100 சதவீதம் கிராம சபை தீர்மானத்தை சிறப்பாக நடைமுறைப்படுத்துதல் ஆகியவற்றின் அடிப்படையில் மத்திய அரசு விருதுகளை வழங்கி கவுரவிக்கிறது.

இந்த விருதுகளை பெறுவதற்காக 60 க்கும் மேற்பட்ட தமிழ்நாடு முன்னாள் கிராம பஞ்சாயத்து தலைவர்கள் கடந்த 10ந்தேதி டெல்லி சென்றனர். இந்த கூட்டமைப்பு தலைவர்களின் கோரிக்கையின் படி, பிரதமர் நரேந்திர மோடியை சந்திக்க மத்திய அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன் ஏற்பாடு செய்தார், அதன்படி நேற்று தமிழக முன்னாள் கிராம பஞ்சாயத்து தலைவர்கள் மத்திய அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணனுடன் பிரதமர் நரேந்திர மோடியை பாராளுமன்ற வளாகத்தில் சந்தித்தனர்.

அப்போது பிரதமர் நரேந்திர மோடி தமிழிலேயே வணக்கத்தை தெரிவித்ததோடு ஒவ்வொருவரை பற்றியும் தனித்தனியாக விசாரித்தார். அவர்கள் செய்து வரும் பணிகள் குறித்தும் கேட்டறிந்தார். மேலும் முன்னாள் கிராம பஞ்சாயத்து தலைவர்களுடன் வந்த அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் குழந்தைகளுடன் மிக வாஞ்சையுடன் மோடி பேசினார். குழந்தைகளின்கல்வி குறித்தும், அவர்கள் எதிர்காலத்தில் என்ன ஆக விரும்புகிறார்கள் என்றும், அவர்களது இலக்கு குறித்தும் கேட்டறிந்த பிரதமர், அவர்களது லட்சியம் வெற்றி பெற வாழ்த்துகளை தமிழிலேயே தெரிவித்து மகிழ்ந்தார்.

பிரதமருடனான இந்த சந்திப்பு வாழ்வில் மறக்க முடியாத ஒன்று என்று தெரிவித்த முன்னாள் பஞ்சாயத்து தலைவர்கள் கூட்டமைப்பினர், இந்த சந்திப்பிற்கு ஏற்பாடு செய்த மத்திய அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணனுக்கு தங்களது நன்றியை தெரிவித்துக்கொண்டனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

செங்கல் சூளையில் கொத்தடிமைகளாக வேலைபார்த்த 4 பேர் மீட்பு; 76 ஆயிரம் நிவாரணத் தொகை

விழுப்புரம் கலெக்டர் சுப்பிரமணியன் வழங்கினார்

விழுப்புரம், ஏப்.13–

விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர்பேட்டைச் சேர்ந்த நால்வர் பொன்னேரி பகுதியில் செங்கல் சூளையில் கொத்தடிமைகளாக இருந்த போது மீட்கட்டனர். அவர்களுக்கு தலா ரூ19 ஆயிரம் நிவாரண உதவித்தொகையை விழுப்புரம் மாவட்ட கலெக்டர் இல.சுப்பிரமணியன் வழங்கினார்.

விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர்பேட்டை வட்டம் கொண்டசமுத்திரம் கிராமத்தைச் சேர்ந்த அய்யசாமின் மகன் சரத்குமார், நன்னாவரம் கிராமத்தைச் சேர்ந்த நடேசன் மகன் ஜீவன்ராஜ், ஆணைவாரி கிராமத்தைச் சேர்ந்த சாம்பமூர்த்தியின் மகன் ஜெயக்குமார், ஜெயக்குமாரின் மனைவி சுலோக்சனா ஆகிய ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த 4 நபர்கள் பல வருடங்களாக கொத்தடிமைகளாக திருவள்ளூர் மாவட்டத்தில் பொன்னேரி பகுதி செங்கல்சூலையில் இருந்தனர். இவர்களை வருவாய் கோட்டாட்சியர், திருவள்ளுவர் சார் ஆட்சியர் ஆகியோர் கண்டறிந்து மீட்டு, திருக்கோவிலூர் வருவாய் கோட்டாட்சியர் செந்தாமரையிடம் ஒப்படைத்தனர்.

மீட்கப்பட்ட இவர்களுக்கு விழுப்புரம் மாவட்ட கலெக்டர் இல,சுப்பிரமணியன் நேற்று தனது அலுவலகத்தில் கொத்தடிமைகள் மறுவாழ்வு திட்டத்தின் கீழ் 4 நபர்களுக்கும் தலா ரூ.19ஆயிரம் வீதம் மொத்தம் ரூ.76 ஆயிரத்துக்கான காசோலையை வழங்கினார்.

இந்நிகழ்வின்போது மாவட்ட வருவாய் அலுவலர் ராஜசேகரன், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் பிரகாஷ்வேல் மற்றும் பலர் உடன் இருந்தனர்.

திண்டிவனத்தில் சாலையில் நின்ற காரில் 4 லட்சம் ரொக்கப்பணம், 107 ஏ.டி.எம். கார்டுகள் 2 பேரிடம் போலீசார் விசாரணை

விழுப்புரம், ஏப்.13–

திண்டிவனத்தில் கேட்பாரற்று நின்ற காரில் ரூ.4.25 லட்சம், 107 ஏ.டி. எம். கார்டுகள் இருந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. இதனை தொடர்ந்து 2 பேரை பிடித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

திண்டிவனம் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் சுமதி தலைமையில் சிறப்பு சப்இன்ஸ்பெக்டர் ரவிதாஸ் மற்றும் போலீசார் இரவு ரோந்து பணியில் ஈடுபட்டு இருந்தனர். அப்போது தீர்த்தகுளம் பகுதியில் உள்ள வங்கி அருகில் சந்தேகப்படும்படியாக கார் ஒன்று நின்று கொண்டிருந்தது.

அந்த கார் யாருடையது என்று அந்த பகுதியில் இருந்தவர்களிடம் போலீசார் விசாரித்தனர். ஆனால் அந்த கார் யாருக்கு சொந்தமானது என்பது குறித்து தெரியவில்லை. இதையடுத்து போலீசார் காரை பறிமுதல், செய்து அதனை சோதனை செய்தனர். அதில் 107 ஏ.டி.எம் கார்டுகளும், 4,24,030 ரூபாயும் இருந்தது.

மேலும் காரில் இருந்த ஆவணங்களை வைத்து திருவண்ணாமலை மாவட்டம் செய்யார் பகுதியைச்சேர்ந்த செல்லமுத்து (வயது40), அதே பகுதியைச்சேர்ந்த அஜிஸ்(28) என்பவர்களிடம் விசாரணை செய்து வருகிறார்கள். அந்த காரை ஏன் நீண்ட நேரம் அந்த பகுதியில் நிறுத்திவைத்தனர் என்பது குறித்தும், அந்த பணம் யாருக்கு சொந்தமானது என்றும்,107 ஏடிஎம் கார்கள் எப்படி அவர்களிடம் வந்தது என்றும் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

இதுகுறித்து திண்டிவனம் போலீசார் வழக்குப்பதிவு செய்து, காரில் ஏ.டி.எம். கார்டுகள் அதிகளவில் இருந்ததால், ஏதேனும் மோசடி கும்பல் இந்த காரில் தப்பி வந்து, இங்கு காரை விட்டு சென்றார்களா? அல்லது வேறு ஏதாவது காரணமா என்று பல்வேறு கோணங்களில் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

எல்&டி ஹவுஸிங் ஃபைனான்ஸ் லிமிடெட்
(முன்பு இந்தோ பசிபிக் ஹவுஸிங் ஃபைனான்ஸ் லிமிடெட், ஏஜஜி ஹோம் ஃபைனான்ஸ் இந்தியா லிமிடெட் மற்றும் வெய்ஸ்மான் ஹோம்ஸ் லிமிடெட் என அறியப்பட்டது)
பதிவு அலுவலகம்: எல்&டி ஹவுஸ், என்.எம். மார்க், பல்லார்ட் எஸ்டேட், மும்பை
கிளை அலுவலகம்: பெங்களூரு

L&T Finance
Home Loans

சர்ஃபேசி சட்டம் 2002-ன் விதிகளின் கீழ் அசையா சொத்துக்களின் விற்பனைக்கான பொது அறிவிப்பு

லோன் கணக்கு எண். (பத்தி e) -க்கு இணங்க, எல்&டி ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் ("ஈட்டுக் கடன்காரர். இந்த வார்த்தையில் அதன் வாரிசுதாரர் மற்றும் உரிமை மாற்றுக்காரர்) மற்றும் கீழே குறிப்பிடப்பட்ட கடன் பெறுபவர் மற்றும் இணை கடன் பெறுபவருக்கு ("கடன் பெறுபவர்")., இதில் அவன்/ அதன் /அவர்களின் முறையான (வாரிசுதாரர்கள், உரிமை மாற்றுக்காரர், வழித்தோன்றல்கள்) இடையே ஒரு வீட்டுக் கடன் ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்டது.

ஈட்டுக் கடன்காரரின் பிணையக் கடன், கீழே பத்தி எண். D-ல் குறிப்பிடப்பட்ட நிலுவைத் தொகை , மற்றும் அவற்றின் மீதான மேற்கொண்ட வட்டி ஆகியவற்றுடன் கடன் பெறுபவர்கள் / இணை - கடன் பெறுபவர்களிடமிருந்து செலவு மற்றும் கட்டணங்களை மீட்க, பத்திரமாக்கும் வழிவகை மற்றும் நிதிச் சொத்துக்களின் மறுசீரமைப்பு விதிகள் மற்றும் பாதுகாப்பு நலன் (அமலாக்க) விதிகள், 2002-ன் விதி எண். 6,7, 8 & 9-உடன் படிக்கப்படும் பாதுகாப்பு நலன் சட்ட அமலாக்க ஏற்பாடு ஆகியவற்றின் கீழ் தனக்கு வழங்கபட்ட அதிகாரத்தை உபயோகிக்கையில், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி கீழே குறிப்பிடப்பட்ட பாதுகாக்கப்பட்ட சொத்துக்களை தன்வசம் எடுத்துக்கொள்ள இணங்குவார். இங்கு கீழே தரப்பட்ட சுருக்க விவரங்களின்படி, எங்கு இருக்கிறது மற்றும் என்ன இருக்கிறது என்பதின் அடிப்படையில் அசையா சொத்துக்களை வாங்க, கீழே கையொப்பமிட்டவரால், சீல் செய்யப்பட்ட கடித உறையில் விலைக்குறிப்பீடுகள் வரவேற்கப்படுகின்றன.

மற்றும் ஈட்டுக் கடனாளரின்அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, குறிப்பிட்ட பிணை சொத்துக்களை விற்பனை செய்ய முடிவு செய்துள்ளார். மேலே விவரிக்கப்பட்ட பாதுகாக்கப்பட்ட சொத்துக்கள் அன்று விற்பனை செய்யப்படும் என்ற விற்பனை அறிவிப்பு இன்று பிரசுரிக்கப்பட்டது.

கடன் வாங்கியவர்(கள்) /இணைந்து கடன் வாங்கியவ்வர்கள் பெயர் (B)	உத்தரவாதமான சொத்துக்களின் விவரங்கள் (C)	பாக்கியுள்ள தொகை (in ₹) (D	கடன் அக்கவுன்ட் எண் (E)	ரிசர்வ் விலை (in ₹) (F)	டெபாசிட் பணம் (in ₹) (G)	சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (H)	ஏலத் தேதி & டெண்டர் திறக்கப்படும் நேரம் (I)
1. பி டி வெங்கடேசன் 2. புவனேஸ்வரி வெங்கடேசன் PT	ஃப்ளேட் எண். F2, முதல் தளம், ப்ளாட் எண். 7, சூப்பர் பில்ட் அப் பரப்பு - 800 சதுர அடி (பொது பரப்பான 170 சதுர அடி உள்ளடங்கியது) தொடர் எண். 109 & 110-ல் அடங்கிய மொத்த நிலப்பரப்பான 1800 சதுர அடியில் நில adm-ன் UDS 450 சதுர அடி, பட்டா எண். 5, நம்பர். 45, கொளத்துவாஞ்சேரி கிராமம், முத்து நகர், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இது பதிவு செய்யப்பட்ட மாவட்டமான தெற்கு சென்னை, சைதாப்பேட்டை ஜாயிண்ட் - II-ன் பதிவு செய்யப்பட்ட துணை மாவட்டத்துக்குள் அமைந்துள்ளது.	ரூ. 40,52,836.51/- 10-04-2017- அன்று	CHNHL14 000584	ரூ. 12,00,000/- (ரூ. பன்னிரண்டு லட்சம்)	ரூ. 1,20,000/- (ரூ. ஒரு லட்சத்து இருபதாயிரம்)	21/04/2017 காலை 11.00 மணியிலிருந்து மாலை 4 மணி வரை	28/04/2017 பகல் 12.00 மணியிலிருந்து பிற்பகல் 1.00 மணி வரை.

சென்னையில், நியமிக்கப்பட்ட நேரம் மற்றும் கால அட்டவணையின்படி. குறிப்பிடப்பட்ட சட்டத்தின் பிரிவு எண் 13 (13)-ன் விதிகளின்படி, எந்த ஒரு விதத்திலும் பிணை சொத்துடன் பேரம் செய்யக் கூடாது மற்றும் அவ்வாறு செய்பவர் தொகை மற்றும் உரிய நேரத்துக்கு முன்பாக அன்றைய தேதி வரையான அதிக வட்டிகளுக்கு ஈட்டுக் கடன்காரரின் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாவர். அட்டவணைப்படி, அவ்வாறு செய்யத் தவறினால், பிணைச் சொத்து விற்கப்படும்.

பிரிவு எண். (C)-க்கு மேலே, இங்கே குறிப்பிடப்பட்ட பிணை சொத்துக்கள் தொடர்பான விவரங்கள், கீழே கையொப்பமிட்டவரின் தகவல் மற்றும் அறிவுக்கு சிறப்பாக எட்டும்படியாக தெரிவிக்கப்பட்டது. எனினும் குறிப்பிடப்பட்ட விவரங்களில் ஏதேனும் பிழை, தவறான கூற்று அல்லது விடுபடல் இருந்தால், அவற்றுக்கு அவர் பொறுப்பாக மாட்டார். பாதுகாக்கப்பட்ட சொத்துக்கள் வில்லங்கத்துடன் மற்றும் சட்டமுறை ஆணைக்குழுவுக்கு (ஏதேனும் இருந்தால்) செலுத்தப்பட வேண்டிய நிலுவைகளுடன் விற்கப்படும் என்று ஒப்பந்தப்புள்ளிக்காரர்(கள்) / விலைக் குறிப்பீட்டாளர்(கள்) / ஏலம் எடுக்கக்கூடியவர்(கள்)/ வாங்குபவர்(கள்) ஆகியோருக்கு இங்கே தெரிவிக்கப்படுகிறது மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளை சமர்ப்பிக்கமுன் மேற்கூறியவை தொடர்பாகவும் மற்றும் மேலே கூறப்பட்ட பாதுகாக்கப்பட்டசொத்துடன் தொடர்புடைய பிற சம்பந்தப்பட்ட விவரங்களையும் சொந்த நலங்கருதி தம்மை/ தங்களை/ தன்னை திருப்தி செய்து கொள்ளுமாறு அவர்களிடம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒப்பந்தப்புள்ளிக்காரர்(கள்) / விலைக் குறிப்பீட்டாளர்(கள்) / ஏலம் எடுக்கக்கூடியவர்(கள்)/ வாங்குபவர்(கள்) ஆகியோர் தங்களின் விலைக் குறிப்பீடுகளை, மேலே கூறப்பட்ட பிணை வைப்புத் தொகையுடன் (EMD), "சொத்துக்களை வாங்குவதற்கான விலைக்குறிப்பீடு" என்று மேலே எழுதப்பட்ட ஒரு சீல் செய்யப்பட்ட கடித உறையிலிட்டு, எல்&டி ஃபைனான்ஷியல் சர்வீஸ், KGN டவர், 5-வது தளம், நம்பர். 62, எதிராஜ் சாலை, எக்மோர், சென்னை - 600105 என்ற முகவரிக்கு 28-04-2017 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ, காலை 11 மணிக்கு முன்பாக அனுப்ப வேண்டும். "எல்&டி ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்" - பெயரில், சென்னையில் அளிக்குமாறு D.D./காசோலை மூலமாக EMD இருக்க வேண்டும் மற்றும் ஏலத்தின் மேற்பார்வை, விதிகள் மற்றும் நிபந்தனைகள் அல்லது ஒப்பந்தப்புள்ளிகளை சமர்ப்பித்தல் தொடர்பாக வேறு ஏதேனும் விளக்கங்கள் தேவைப்பட்டால், தயவுசெய்து திரு. முரளி சேகர் அவர்களை 9566629356 என்ற மொபைல் எண்ணில் தொடர்பு கொள்ளவும். செயல் தடை நேரத்துக்கு முன்னதாக முழுமையான விவரங்களுடன் ஈட்டுக் கடன்காரரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், ஏலம் விடுவதற்காக கவனத்தில் கொள்ளப்படும். எந்த ஒரு காரணமும் கூறாமல் ஏதேனும் அல்லது அனைத்து ஏலங்களையும் நிராகரிக்கும் உரிமை அங்கீகாரம் பெற்ற அதிகாரிக்கு உண்டு.

கையொப்பம்/-
தேதி: 12.04.2017
இடம்: சென்னை
அதிகாரம் பெற்ற அதிகாரி
எல்&டி ஹவுஸிங் ஃபைனான்ஸ் லிமிடெட்டிற்காக

equitas
எக்விடாஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்
CIN: U65100TN2007PLC064069
பதிவு அலுவலகம்: 410A, 4வது மாடி, ஸ்பென்ஸர் ப்ளாசா, ஃபேஸ் 2, எண். 769, மவுண்ட் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 2.
தொ.பே: 044-42995000 | தொலைநகல்: 044-42995050
www.equitas.in | மின் அஞ்சல்: secretarial@equitas.in

செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015–ன், விதி 29 மற்றும் விதி 47ன் படி, மார்ச் 31, 2017 அன்று முடிவடைந்த நிதியாண்டுக்கான தனிப்பட்ட மற்றும் ஒட்டு மொத்த தணிக்கை செய்யப்பட்ட நிதி நிலை முடிவுகள் மற்றும் இதர விஷயங்களைப் பரிசீலிக்க, மே 5, 2017 வெள்ளிக்கிழமை அன்று நிறுவன இயக்குனர்களின் கூட்டம் நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இந்த அறிவிப்பு, நிறுவனத்தின் இணையதளம் www.equitas.in மற்றும் பங்குச் சந்தை இணையதளங்களில் www.bseindia.com மற்றும் www.nseindia.com உள்ளது.

எக்விடாஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்க்காக
(ஒப்பம்)
இடம்: சென்னை
தேதி: ஏப்ரல் 12, 2017
திருமதி. ஜெயஸ்ரீ சு அய்யர், நிறுவன செயலர்

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
சூளை கிளை
முன்னாள் இராணுவத்தினர் நலவாரிய வளாகம்,
22, சைடன்ஹாம்ஸ் சாலை,
சூளை, சென்னை 600003

டெண்டர் மற்றும் ஏல விற்பனை அறிவிப்பு

கடன்தாரரின் பெயர் : Mr.S.காசி
வாகன விபரம் : Mahindra Xylo H4 M Hawk CRDI (white Colour) Registration No. TN 05 AX 8771

குறைந்தபட்ச விலை ரூ. 2லட்சத்து 35ஆயிரம் டேவணித்தொகை ரூ. 23,500

மூடி உறையிலிடப்பட்ட விண்ணப்ப படிவங்கள் சமர்ப்பிக்க கடைசி தேதி மற்றும் நேரம் : 15.04.2017 நண்பகல் 12.00 மணிக்குள்
டெண்டர்கள் திறக்கப்படும் தேதி நேரம்: 15.04.2017 பிற்பகல் 2.00 மணிக்கு
டெண்டர் திறக்கப்படும் இடம்: **இந்தியன் ஓவர்சீஸ் வங்கி**, முன்னாள் இராணுவத்தினர் நலவாரிய வளாகம், 22, சைடன்ஹாம்ஸ் சாலை, சூளை, சென்னை 600003

வாகனத்தினை பார்வையிட மற்றும் மேலும் விபரங்களுக்கு
Mob: 98841 04461 தொடர்பு கொள்ளவும்
இடம் : சென்னை
தேதி : 13.04.2017
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

கேரள அரசு
புனலூர் வனப்பிரிவு
தொலைபேசி: 0475 2222621
Window No. PL.2–4574/2016
தேதி: 31.03.2017

இ–ஏலம்
விண்டோ அறிவிப்பு எண். 03/17 தேதி 29.04.2017

புனலூர் பிரிவில் அன்சால் ரேஞ்ச், மடதாரா பிரிவில் ஆயிரநல்லூர் 1952 தேக்கு தோட்டத்தில் கடைசியாக விழுந்த தேக்கு கம்புகள், 2000 மொக்காவிலிருந்து சேகரிக்கப்பட்ட அகாசியா பட்எண்ட், 2003 பணயம் பிட் I & II, 2002 செருகரா அகாசியா தோட்டம் கலாம்குன்னு பிரிவு, 2003 கடமன்கோடு அகாசியா தோட்டம், குளத்துபுழா பிரிவு, 2005 கடமன்கோடு அகாசியா தோட்டம், குளத்துபுழா பிரிவு, 2000 கேனால் பெல்ட், ஆரியநல்லூர் அகாசியா தோட்டம், 2002 ஒசுகுபரா அகாசியா தோட்டம் ஆகிய இடங்களில் சேகரித்து வைக்கப்பட்டுள்ளவற்றுக்கு இ–ஏல விற்பனை கீழ்க்கண்டவாறு நடைபெறும்.

அட்டவணை

இணைய தளத்தில் இ–ஏல படிவங்கள் கிடைக்கும் தேதி	15.04.2017 (Total – 35 lots)
இ–ஏல தேதி	29.04.2017

மேலும் விவரங்களுக்கு அதிகாரபூர்வ இணையதளம் www.mstcecommerce.com, MSTC பெங்களூர் அலுவலகத்தில் கேட்டறியலாம்.
தொலைபேசி எண். டிவிஷனல் வன அதிகாரி, புனலூர் 0475–2222621
ரேஞ்ச் வன அதிகாரி, அன்சால் 0475–2270100
இடம் : புனலூர்
தேதி: 31.03.2017
R.O. No. 117/F3/17/PRD Dt. 7-4-17
ஐ. சித்திக், ஐஎப்எஸ்
டிவிஷனல் வன அதிகாரி, புனலூர்
(கேரள ஆளுநர் சார்பாக)

EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்
The Oberoi Group உறுப்பினர்
பதிவு அலுவலகம்: 1/24, ஜி.எஸ்.டி ரோடு, மீனம்பாக்கம், சென்னை–600027.
Telephone: 91-44-2234 4747; Facsimile: 91-44-2234 6699, 91-44-2234 4985
முதலீட்டாளர்கள் சேவைகள் பிரிவு: 7 ஷாம் நாத் மார்க், டெல்லி-110054
Telephone: 91-11-2389 0505; Facsimile: 91-11-2389 0575 Website: www.eihassociatedhotels.in
Email: isdho@oberoigroup.com; invcom@tridenthotels.com CIN: L92490TN1983PLC009903

கம்பெனியின் சமபங்குதாரர்களுக்கு அறிவிப்பு

பொருள்: கம்பெனியின் சாதாரண சமபங்குகளை முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி சஸ்பென்ஸ் கணக்கிற்கு மாற்றுதல்

19 நவம்பர், 2016 அன்று ‘பிசினஸ் ஸ்டாண்டர்ட்’, ‘பைனான்ஷியல் எக்ஸ்பிரஸ்’ மற்றும் ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ ஆகியவற்றில் ஆங்கிலத்திலும் ‘மக்கள் குரல்’ நாளிதழில் தமிழிலும் வெளியான முந்தைய அறிவிப்பின் தொடர்ச்சியாக இது உள்ளது. இந்திய அரசின் (எம்சிஏ) கம்பெனி விவகாரங்கள் துறை அமைச்சகத்தினால் அறிவித்தபடி, கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 124 (6) மற்றும் முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையம் (கணக்கு வைப்பு, தணிக்கை, பரிமாற்றம் மற்றும் திருப்பியளித்தல்) விதிகள் 2016 (ஐஇபிஎப் விதிகள்) மற்றும் திருத்தப்பட்ட முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையம் (கணக்கு வைப்பு, தணிக்கை, பரிமாற்றம் மற்றும் திருப்பியளித்தல்) விதிகள் 2017 (ஐஇபிஎப் திருத்த விதிகள்’)–ன்படி, தொடர்ந்து ஏழு (7) ஆண்டுகள் அல்லது அதற்கு மேலாக டிவிடெண்ட் கோரப்படாத கம்பெனியின் சாதாரண பங்குகளை சட்டப்படி இந்திய அரசின் முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதிக்கு (ஐஇபிஎப்) மாற்ற வேண்டிய அவசியம் கம்பெனிக்கு உள்ளது என்று இதன் மூலம் உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்படுகிறது. அதற்கிணங்க, 7 ஆண்டு காலத்திற்கு டிவிடெண்ட் கோரப்படாமல் உள்ள உறுப்பினர்களுக்கு இது குறித்து தனித்தனியே அறிவிப்பு 10 நவம்பர், 2016 அன்று பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. அந்த பங்குதாரர்களின் விவரம் மற்றும் ஐஇபிஎப்–க்கு மாற்றப்பட உள்ள பங்குகள் குறித்த முழு விவரங்கள் ஆகியவற்றை அதன் இணையதளம் www.eihassociatedhotels.inல் கம்பெனி பதிவேற்றம் செய்யதுள்ளது.

28 பிப்ரவரி, 2017 அன்று கம்பெனி விவகாரங்கள் துறை அமைச்சகத்தினால் வெளியிடப்பட்ட திருத்தப்பட்ட ஐஇபிஎப் விதிகளின்படி, மேற்கண்ட பங்குகளை மாற்றுவதற்கு கடைசி தேதி 31 மே, 2017 ஆகும். நிதி ஆண்டு 2009–10 முதல் நிதி ஆண்டு 2015–16 வரையிலான டிவிடெண்டை கோரி பெறுவதற்கு சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு ஒரு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இது குறித்து அவர்கள் ஒரு கடிதத்தை கையொப்பமிட்டு கம்பெனியின் பங்கு பரிமாற்ற முகவர், அதாவது இஐஎச் லிமிடெட், முதலீட்டாளர்கள் சேவைகள் பிரிவு (ஐஎஸ்டி), 7 ஷாம் நாத் மார்க், டெல்லி–110 054 அவர்களுக்கு 31 மே, 2017க்குள் வந்து சேரும்படி அனுப்ப வேண்டும். ஒருவேளை, மேற்குறிப்பிட்டுள்ள தேதிக்குள் செல்லத்தக்க கோரிக்கையை ஐஎஸ்டி பெறாதபட்சத்தில், இந்த பங்குகளை ஐஇபிஎப் ஆணையத்துக்கு மாற்றும் நடவடிக்கைகளை கம்பெனி மேற்கொள்ளும்.

ஐஇபிஎப் விதிகளின்படி ஐஇபிஎப் சஸ்பென்ஸ் கணக்கிற்கு மாற்றுவதற்காக, பங்குதாரர்கள் வைத்துள்ள அசல் பங்கு சான்றிதழ்களுக்கு பதிலாக மாற்று பங்கு சான்றிதழ்களை கம்பெனி வழங்கும் என்பதை தாள் வடிவில் பங்குகளை வைத்துள்ள சம்பந்தப்பட்ட பங்குதாரர்கள் மற்றும் ஐஇபிஎப் சஸ்பென்ஸ் கணக்கிற்கு மாற்றப்பட உள்ள பங்குகளை வைத்துள்ள பங்குதாரர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். இவ்வாறு வழங்கப்படுவதால், அவர்களின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள அசல் பங்கு சான்றிதழ்கள் தானாகவே ரத்தாகிவிடும். எனவே வர்த்தகம் மேற்கொள்ள முடியாது. ஐஇபிஎப் விதிகளின்படி, ஐஇபிஎப் சஸ்பென்ஸ் கணக்கிற்கு மாற்றுவதற்காக, கம்பெனி மாற்று பங்கு சான்றிதழ்களை வழங்குவதற்கான போதுமான அறிவிப்பாக கம்பெனி அதன் இணையதளத்தில் படியேற்றம் செய்யப்படும் விவரங்கள் இருக்கும் என்பதை பங்குதாரர்கள் மேலும் கவனிக்க வேண்டும்.

மேற்கண்ட விஷயத்தில் எவருக்கேனும் சந்தேகம் இருப்பின் அது குறித்து கம்பெனிகள் பங்கு பரிமாற்ற முகவர் அதாவது இஐஎச் லிமிடெட், முதலீட்டாளர்கள் சேவைகள் பிரிவு (ஐஎஸ்டி), 7 ஷாம் நாத் மார்க், டெல்லி–110 054 அல்லது இமெயில் முகவரி isdho@oberoigroup.com, invcom@tridenthotels.com அவர்களை அணுகலாம் அல்லது தொலைபேசி எண் 011–23890505ல் தொடர்பு கொள்ளலாம்.

EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்டுக்காக
இடம்: கொல்கத்தா
இந்த்ராணி ரே
தேதி: 12 ஏப்ரல், 2017
கம்பெனி செயலாளர்